FWC

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
Term Examination, March - 2018

தரம் :- 13 (2018)	கர்நாடக சங்கீதம் I	நேரம் :- 2.00 மணித்தியாலம்

பகுதி I

❖ **01 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை தெரிந்தெடுத்து புள்ளியிடுக.**

01. த்வி ஸ்வர வக்ர ராகம்
1) அஸாவேரி 2) ஸ்ரீராகம் 3) கமாஸ் 4) கர்நாடக பெஹாக் 5) பிலஹரி

02. சதுஸ்ருதி ரிஷபம், அந்தரகாந்தாரம் என்னும் ஸ்வரங்களை எடுத்துக் கொள்ளும் மேளகர்த்தா சக்கரங்கள் முறையே.
1) 3 ஆவதும் - 9 ஆவதும் ஆகும் 2) 4 ஆவதும் - 10 ஆவதும் ஆகும்
3) 5 ஆவதும் - 11 ஆவதும் ஆகும் 4) 5 ஆவதும் - 9 ஆவதும் ஆகும்
5) 5 ஆவதும் - 10 ஆவதும் ஆகும்

03. "உச்சவ பிரபந்தம்" என்ற இசை நூலை இயற்றியவர்.
1) ஸ்வாதித்திருநாள் மகாராஜா 2) தியாகராஜஸ்வாமி 3) முத்துஸ்வாமி தீட்சதர்
4) சியாமாசாஸ்திரி 5) பைடால குருமூர்த்தி சாஸ்திரி

agaram.lk

04. "God Save the king" என்னும் பிரபலமான இன்னிசைப்பாடலுக்கு சமஸ்கிருத சாகித்தியம் அமைத்து பெரும் புரட்சியை ஏற்படுத்தியவர்
1) பைடால குருமூர்த்தி சாஸ்திரி 2) முத்துஸ்வாமி தீட்சதர் 3) சியாமா சாஸ்திரி
4) தியாகராஜஸவாமி 5) ஷேத்ரக்ஞர்

05. நவராக மாலிகா வர்ணத்தின் முத்தாயிஸ்வரம் அமைந்துள்ள இராகங்கள்
1) மோகனம், கேதாரம் 2) கேதாரம், சங்கராபரணம் 3) கல்யாணி, காம்போதி
4) பிலஹரி, ஸ்ரீராகம் 5) கல்யாணி, பேகட

06. "தில்லானா சக்கரவர்த்தி" என நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனால் கௌரவிக்கப்பட்டவர்
1) M. S. சுப்புலட்சுமி 2) லால்குடி ஜெயராமன் 3) பாலமுரளி கிருஷ்ணா
4) மைசூர் சௌடய்யா 5) M. L. வசந்தகுமாரி

07. சுத்தாங்கமாகப் பாடப்படும் பாடல்
1) வர்ணம் 2) தேவாரம் 3) திருப்புகழ் 4) திருவாசகம் 5) கீதம்

08. திருநேரிசை, திருவிருத்தம், திருத்தாண்டகம், திருக்குறுந்தொகை ஆகிய நான்கு பாவின வகைகளிலும் பாடல்களை அருளியவர்
1) திருஞானசம்பந்தர்   2) திருநாவுக்கரசர்   3) சுந்தரமூர்த்தி நாயனார்
4) மாணிக்கவாசகர்   5) காரைக்காலம்மையார்

09. "நெரநம்மி" என்னும் அடதாள வர்ணம் அமைந்துள்ள இராகத்தின் தாய் இராகம்.
1) சங்கராபரணம்   2) கல்யாணி   3) ஹரிகாம்போதி
4) பந்துவராளி   5) கரகரப்பிரியா

10. கதி பேதங்களினால் உண்டாகும் தாளத்தின் மொத்த எண்ணிக்கை
1) 75   2) 108   3) 175   4) 52   5) 7

11. சகல வாத்தியம் என்பதற்கு உதாரணமாக அமையும் வாத்தியம்
1) புல்லாங்குழல்   2) வீனை   3) வயலின்   4) தம்புரா   5) நாதஸ்வரம்

12. நாட்டிய நாடகத்தின் ஆரம்பத்தில் உறுப்பினர்களை அறிமுகப்படுத்தும் வகையில் அமைந்த பாடல்
1) ஐக்கனி தரு   2) வருணனை தரு   3) ஸ்வாக தரு
4) பிரவேசிக தரு   5) சம்வாத தரு

13. திரிதால், பாஷ்டோ போன்ற புதிய தாளங்களை அறிமுகப்படுத்தியவர்
1) மொஸாட்   2) பாக்   3) தான்சேன்   4) அமிர்குஸ்ரு   5) பாத்கண்டே

14. ஹிந்துஸ்தானி இசையில் "துர்க்கா" என அழைக்கப்படும் இராகம்
1) ஆபோகி   2) சுத்தசாவேரி   3) வசந்தா   4) சாவேரி   5) சண்முகப்பிரியா

agaram.lk

15. $\overset{\smile}{8}$ இவ் அடையாளம் குறிப்பது
1) குருவிராம   2) குரு த்ருதம்   3) புலுதம்   4) புலுத விராம   5) குருத்ருத விராம

16. ஒருதாள அங்கத்தை எத்தனை வகைகளில் நாம் விரித்துக்காட்ட முடியுமோ அத்தனை வகைகளில் விரித்துக் காட்டுவது.
1) யதி   2) களை   3) டமருக யதி   4) பிரஸ்தாரம்   5) ஜதி

17. தூத்துக்குடியில் நடைபெற்ற திருமுறை விழாவில் "இசை வல்லார்" என்ற பட்டத்தைப் பெற்ற இலங்கைக் கலைஞர்
1) தவில் தட்சனாமூர்த்தி   2) குப்பிளான் செல்லத்துரை   3) N. வீரமணி ஐயர்
4) P. S. ஆறுமுகம் பிள்ளை   5) N. சண்முகரத்தினம்

18. "அன்னமே என்ன செய்வேன்" என்ற தோடி இராகப்பாடலை இயற்றியவர்
1) ஜெயதேவர்   2) சாரங்கதேவர்   3) வேங்கடமதி
4) மாரிமுத்தாபிள்ளை   5) கனம் கிருஷ்ணய்யர்

19. இராகத்திலோ அதில்வரும் சங்கதியிலோ தொடக்கமாக இருக்கும் ஸ்வரம்
1) நியாஸம் 2) தாரம் 3) அம்சம் 4) கிரகம் 5) பகுத்துவம்

20. கன வாத்தியம்
1) கிளாரினெட் 2) ஜலதரங்கம் 3) தவில் 4) வயலின் 5) வீணை

21. பாமரஜனகான வாத்தியம்
1) தந்திபானை 2) தமுக்கு 3) ரணபேரி 4) குடமுழா 5) வீணை

22. "மாதர்மடப்பிடியும்" என்ற தேவாரத்திற்குரிய பண்
1) தக்கேசி 2) பழம்பஞ்சுரம் 3) யாழ்முரி 4) நட்டபாடை 5) செந்துருத்தி

23. ஸகரிகமபதபஸ் - ஸ்நிதபமகரிஸ என்ற ஆரோகண அவரோகணத்தையுடைய இராகம்
1) ஸாரங்கா 2) நீலாம்பரி 3) கீரவாணி
4) ஆனந்தபைரவி 5) சண்முகப்பிரியா

24. ஹிந்துஸ்தானி இசையில் முதன் முதலில் கற்பிக்கப்படும் இராகம்
1) பிலாவல் 2) பூபாலி 3) கமாஜ் 4) யமன் 5) பைரவ்

25. மூச்சனை கமகத்திற்கு உதாரணம்
1) ஸரி ரிக கம 2) ஸஸஸ ரிரிரி ககக 3) ஸகா ஸமா ஸபா
4) ஸரிகமபதநீ 5) ஸ்நிநிததபபம

26. ஹிந்துஸ்தானிய சங்கீதம் ஆங்கிலேயரின் ஆட்சிக்குப்பின் அழிந்து போகாமல காத்த பெருமைக்குரியவர்
1) பாத்கண்டே 2) அமீர்குஸ்ரூ 3) தான்சேன் 4) மொசாட் 5) பாக்

27. ஸம்பூர்ண ஆரோகண அவரோகணத்தை உடைய பாஷாங்க ராகம்
1) பிலஹரி 2) ஹமீர்கல்யாணி 3) ஹிந்துஸ்தான்காபி
4) காம்போதி 5) பைரவி

28. ஒரே நேர்கோட்டில் எழுதப்படும் கர்நாடக சங்கீத லிபி முறையைக் குறிப்பது
1) ஸ்டாவ் நொட்டேஷன் 2) ஸ்கிரிப் நொட்டேஷன் 3) நச்சுரல்
4) ஷார்ப் (Sharp) 5) பிளட் (Flat)

29. சங்கீத ரத்னா கரத்தில் குறிப்பிடப்படும் கமகங்கள்
1) 15 2) 10 3) 22 4) 17 5) 5

30. ஒரு தருணத்தில் ஒரு ஸ்வரத்தை தான் வாசிக்கக்கூடிய வாத்தியம்
1) பியானோ 2) வயலின் 3) வீணை 4) நாதஸ்வரம் 5) கோட்டு வாத்தியம்

agaram.lk

31. ஷேத்திரக்ஞரின் இயற் பெயர்

1) மூர்த்தி 2) வரதய்யா 3) குருகுக 4) முவ்வகோபால 5) ராஜனுத

32. சாகித்தியங்களிடையே சொற்கட்டுகள் வரும் அணி

1) சொற்கட்டு ஸ்வரம் 2) மத்திமகால சாகித்தியம் 3) சொற்கட்டு சாகித்தியம்
4) மகுட சாகித்தியம் 5) ஸ்வர சாகித்தியம்

33. ஹிந்துஸ்தானி இசையில் "கஸல்" என அழைக்கப்படும் கர்நாடக இசை உருப்படி

1) பதம் 2) ஜாவளி 3) தில்லானா 4) சூளாதி 5) அஷ்டபதி

34. "Moonlight Sonata" எனும் நூலை இயற்றியவர்

1) பாக் 2) அமீர்குஸ்ரு 3) பீதோவன் 4) பாத்கண்டே 5) மொஸாட்

35. தாளத்தின் அங்கங்களைக் கைச் செய்கையினால் காட்டுவது

1) கிரியை 2) மார்க்கம் 3) அங்கம் 4) களை 5) யதி

36. ஸாரங்கி வாத்தியத்தின் அனுதாபத் தந்திகள்

1) 11 – 12 2) 11 அல்லது 12 3) 30 – 35 4) 35 – 40 5) 12 – 24

37. "வாணி பொந்து" என்ற ஜாவளி அமைந்த இராகம்

1) கானடா 2) சுட்டி 3) பந்துவராளி 4) சங்கராபரணம் 5) காபி

38. கதக் நடனத்திற்கு பக்க வாத்தியமாக வாசிக்கப்படும் நரம்பு வாத்தியம்

1) வயலின் 2) ஸரோட் 3) ஸிதார் 4) தம்புரா 5) ஸாரங்கி

39. கர்நாடக சங்கீதத்தில் உபதாள வாத்தியமாகக் காணப்படும் உலோக வாத்தியம்

1) கடம் 2) தவில் 3) முகர்சிங் 4) தபேலா 5) கஞ்சீரா

40. வட இந்தியாவில் "கடா" என்று அழைக்கப்படும் வாத்தியம்

1) கெஞ்சிரா 2) மிருதங்கம் 3) கடம் 4) தவில் 5) ஜலதரங்கம்

41. திசி - ஸ்ரீ இராகம்

1) ஸிம்மேந்திரமத்திமம் 2) சுபபந்துவராளி 3) சண்முகப்பிரியா
4) ஆனந்தபைரவி 5) கல்யாணி

42. நவரஸ நாயகர் என அழைக்கப்படுபவர்

1) சாரங்க தேவர் 2) வேங்கடமகி 3) அருணகிரிநாதர்
4) மைசூர்வாசு தேவாச்சாரியார் 5) சுவாதித் திருநாள் மகாராஜா

43. அடதாள வர்ணத்தில் ஒரு ஆவர்த்தனத்தில் இடம் பெறும் அட்சரங்கள்

1) 32 2) 56 3) 26 4) 64 5) 18

agaram.lk

44. தாள சந்தங்களுக்கு ஏற்ப பாடப்படும் பாடல்

1) தேவாரம் 2) கீதம் 3) திருப்புகழ் 4) கீர்த்தனை 5) தில்லானா

45. தபேலா என்ற வாத்தியத்தை உருவாக்கியவர்

1) தான்சேன் 2) மீதோவன் 3) பாக் 4) மொஸாட் 5) அமீர்குஸ்ரு

46. "கயான் உதேஜாக் மண்டலி" என்ற இசைச் சங்கத்தில் சேர்ந்து இசை உலகிலேயே தன் வாழ் நாட்களைக் கழித்தவர்

1) அமீர்குஸ்ரு 2) பாத்கண்டே 3) பீதோவன் 4) பாக் 5) மொஸாட்

47. கர்நாடக ஹிந்துஸ்தானி இசைக்கலைஞர்கள் தம் தம் இசைக்குரிய பக்க வாத்தியத்துடன் ஒரே மேடையில் மாறி மாறிப்பாடுதல்

1) ஜுகல்பந்தி 2) புதியகச்சேரி 3) கூட்டிசை 4) குழு இசை 5) பல்லியக்கச்சேரி

48. சங்கீத தர்ப்பணம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ள வாத்தியம்

1) ஸாரங்கி 2) ஸிதார் 3) வீணை 4) கிற்றார் 5) பியானோ

49. "திருப்பாவைமணி" எனும் பட்டத்தைப் பெற்றவர்

1) M. L. வசந்தகுமாரி 2) மாலி 3) D. K. பட்டம்மாள்

4) M.S. சுப்புலக்சுமி 5) இராஜ இராஜேஸ்வரி

50. ஒரே பொருளில் வெவ்வேறு முத்திரைகளை வைத்துப் பாடுதல்

1) ஸ்தல முத்திரை 2) ஸ்வநாம முத்திரை 3) பரியாய முத்திரை

4) ராஜ முத்திரை 5) முத்திரை

agaram.lk

(50X2=100 புள்ளிகள்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

FWC

தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
Term Examination, March- 2018

தரம் :- 13 (2018)	கர்நாடக சங்கீதம் II	நேரம் :- 3.00 மணித்தியாலம்

பகுதி I
பகுதி – அ

❖ **பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01\. i) தாள தசப் பிராணங்களை குறிப்பிடுக.

ii) அவற்றுள் நான்கினை விளக்குக.

iii) கதிபேதத்தினால் 35 தாளங்கள் 175 தாளங்களாகும் விதத்தினை விளக்கி துருவதாளம் பஞ்சகதி பேதம் அடையும் முறையினைத் தருக.

(5+6+9=20புள்ளிகள்)

02\. i) பாலுஸ்வாமி தீட்சதரினால் கர்நாடக இசைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட நரம்புக்கருவி யாது?

ii) இவ் வாத்தியத்தின் தந்திகள் சுருதி கூட்டப்படும் முறையைக் குறிப்பிடுக.

iii) இவ் வாத்தியம் வாசிப்பதில் பிரபல்யமான வித்துவான்கள் இருவரைக் குறிப்பிடுக.

iv) இவ் வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுகு.

v) இவ் வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.

(1+2+2+7+8=20புள்ளிகள்)

03\. i) கிருதிகளை அலங்கரிக்கும் அணிகளை, அவற்றின் அமைப்பினை அடிப்படையாகக் கொண்ட மூன்று வகைப் பிரிவுகளையும் குறிப்பிடுக.

ii) ஸ்வராக்ஷர அணியினை உதாரணத்துடன் விளக்குக.

iii) தசவிதகமகங்களையும் வரிசைக் கிரமமாக எழுதுக.

iv) தசவிதகமகங்களுள் இரண்டினை உதாரணத்துடன் விளக்குக.

(3+4+5+8=20புள்ளிகள்)

agaram.lk

பகுதி II

04. i) கனம் பாடுவதில் தேர்ச்சி பெற்ற வாக்கேய காரர்யார்?

ii) அவரால் இயற்றப்பட்ட பதங்கள் இரண்டு குறிப்பிடுக?

iii) அவரது இசைத் தொண்டினையும், வாழ்க்கை வரலாற்றையு் எழுதுக?

(1+2+17=20புள்ளிகள்)

05. பின்வரும் இராகங்கள் இரண்டினை தெரிவு செய்து அவற்றின் இலட்சணங்களை விரிவாக எழுதுக. (உருப்படிகள், சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்)

i) பண் - கௌசிகத்திற்கு இணையான கர்நாடகராகம்

ii) ஹமீர் கல்யாணி

iii) வக்ரஷாடவ சம்பூர்ணராகம்

iv) சுத்தசாவேரி

(10+10=20புள்ளிகள்)

06. பின்வரும் உருப்படிகளுள் இரண்டிற்கு விரிவான இலட்சணம் தருக?

i) திருவாசகம்

ii) திருப்புகழ்

iii) தில்லானா

iv) தரு

(10+10=20புள்ளிகள்)

agaram.lk

07. கர்நாடக இசைக்கும் ஹிந்துஸ்தானி இசைக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளைத் தருக.

(20 புள்ளிகள்)

08. i) மேலைத்தேய லிபி முறை எவ்வாறு அழைக்கப்படுகிறது? ½ புள்ளி

ii) மேலைத்தேய இசையில் சப்தஸ்வரங்களுக்கு வழங்கப்படும் பெயர்களைக் குறிப்பிடுக.

½X7=3½புள்ளிகள்

iii) மேலைத்தேய இசையில் 12 ஸ்வரதானங்களுக்கு வழங்கும் பெயர்களைக் குறிப்பிடுக?

½X12=6புள்ளிகள்

iv) பின்வரும் இராகங்களின் ஆரோகண அவரோகணங்களை மேலைத்தேய லிபிமுறையில் எழுதுக.

i) மோகனம்

ii) பந்துவராளி 5X2=10புள்ளிகள்

மொத்தம் - 20 புள்ளிகள்